**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஓசூர்</u>**

**<u>(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி. சி. எண். : 149/2022**

**அ.சா. : 1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஹரீஸ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | ராமப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 31 |

1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **நாள்: 31.01.2023**

**முதல் விசாரணை :**

நான் கர்நாடகா மாநிலம் பெங்களூர் டி.ஓசஹல்லியில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோன திரு.அணில்குமார் என்னுடைய உடன்பிறந்த இளைய சகோதரர் ஆவார். எனது தம்பி அணில்குமாரும் ஓட்டுநராக பணிபுரிந்துவந்தார். 18.08.2021 ம் தேதி இரவு 07.45 மணியளவில் எனது சகோதரர் அணில்குமார் ஹோண்டா சிட்டி இருசக்கர வாகனத்தினை ஓட்ட அவருக்குப் பின்னால் அவருடைய நண்பர் திரு.சீனிவாசன் என்பவர் பயணித்தார். பேரிகையிரலிருந்து பாகலுர் செல்லும்வழியில் குட்செட்லு அருகே வரும்போது எதிரே வந்த டிப்பர் லாரிமோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்தில் அணில்குமாருக்கு இடது பக்க கால் மற்றும் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. மேலும் திரு.சீனிவாசனுக்கு தலையில் மற்றும் காலிலும் அடிபட்டது. மேற்படி சம்பவம் நடந்த சமயத்தில் நான் ஊரில் இருந்தேன். விபத்து சம்பந்தமாக திரு.சீனிவாசன் எனக்கு கைபேசி மூலம் விபத்து நடந்த அரை மணி நேரத்தில் தகவல் தெரிவித்தார். நான் சம்பவம் பற்றித் தெரிந்து இரவு 9.00

மணிக்கு ஒசூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். பின்பு மேல் சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சையில் சேர்த்தோம். அதன்பின்னிட்டு மேல் சிகிச்சைக்காக பெங்களூரில் உள்ள ஈஸ்ட் பாய்ன்ட் என்ற தனியார் மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். மேற்படி விபத்து குறித்து பாகலுர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். **(மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.)** புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிா தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் தெரிவித்த விவரத்தினைத்தான் காவல் துறையினரிடம் வாக்குமூலமாக அளித்தேன் என்றால் சரிதான். வழக்கு விபத்து சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லையென்றால் சரிதான், ஆகவே யாருடைய அஜாக்கிரதையால் வழக்கு விபத்து சம்பவம் நடந்தது என்று எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். எனக்கு தமிழ் எழுதப்படிக்கத் தெரியாது என்றால் சரிதான். நான் வழக்கு விபத்து சம்பவம் தொடர்பான விவரங்களை காவல் துறையினருக்கு கன்னட மொழியில் தெரிவித்தேன். ஆகவே அ.சா.ஆ.1 புகார் மனுவில் என்ன விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. 18.08.2021 ம் தேதியன்று காருபெல்லாவில் நடந்த திருவிழாவிற்கு சென்றுவிட்டு திரும்பி பேரிகை-பாகலுர் ரோட்டின் வலது பக்கம் இருசக்கர வாகனத்தில் வழக்கு விபத்து சம்பவத்தில் இறந்துபோன திரு.அணில்குமார் வந்துகொண்டிருந்தார் என்றால் சரிதான். திரு.அணில்குமார் அவருக்கு முன் சென்றுகொண்டிருந்த வாகனத்தை முந்தி செல்ல முயற்சிசெய்தபோதுதான் வழக்கு விபத்து சம்பவம் நடந்தது என்றால் சரியல்ல. திரு.அணில்குமார் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்துவந்தார் என்றாலும் காலை 08.00 மணி முதல் மாலை 06.00 மணிவரை அவருக்கு பணி நேரம் என்றாலும் சரிதான். விபத்து நடந்த தேதியன்று தன்னுடைய வேலைக்கு செல்லும்போதுதான் திரு.அணில்குமாருக்கு

விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு,
சரியென ஒப்புக்கொண்டார்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1
ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஓசூர்**
**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி. சி. எண். :** 149/2022
**அ.சா. :** 2

| | | |
|---|---|---|
| பெயர் | : | சீனிவாசன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | ஜெய்கிருஷ்ணப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 24 |

1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **நாள்: 31.01.2023**

**முதல் விசாரணை :**

நான் கர்நாடகா மாநிலம் பெங்களூர் மத்திகரே ராமைய்யா கல்லுரிக்கு அருகில் வசித்து வருகிறேன். நான் Swiggy யில் பணிபுரிந்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோன திரு.அணில்குமார் எனக்குத் தெரிந்த நண்பர் ஆவார். திரு.அணில்குமாரும் ஓட்டுநராக பணிபுரிந்துவந்தார். 18.08.2021 ம் தேதி இரவு 07.45 மணியளவில் நானும் திரு,அணில்குமாரும் ஹோண்டா சிட்டி இருசக்கர வாகனத்தினை ஓட்ட அவருக்குப் பின்னால் நான் அமர்ந்து பயணித்தேன். அப்போது பேரிகையிரலிருந்து பாகலுர் செல்லும்வழியில் குட்செட்லு அருகே வரும்போது எதிரே வந்த டிப்பர் லாரிமோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்தில் அணில்குமாருக்கு இடது பக்க கால் மற்றும் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. மேலும் எனக்கு தலையில் மற்றும் காலிலும் அடிபட்டது. மேற்படி சம்பவம் குறித்து திரு.அணில்குமாரின் உடன்பிறந்த சகோதரர் திரு.ஹரீஸ் என்பவருக்கு கைபேசி மூலம் தகவல் தெரிவித்தேன். பின்பு வழக்கு விபத்தில் காயமுற்ற திரு.அணில்குமாரையும் என்னையும் அவசர ஊர்தியில் ஒசூர் அரசு

மருத்துவமனைக்கு அழைத்து வந்தனர். எங்கள் இருவருக்கும் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது. நான் ஒருநாள் ஒசூர அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்கைபெற்று வீடு திரும்பினேன், ஆனால், திரு.அணில்குமார் மேல் சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சையில் சேர்த்தோம். அதன்பின்னிட்டு மேல் சிகிச்சைக்காக பெங்களுரில் உள்ள ஈஸ்ட் பாய்ன்ட் என்ற தனியார் மருத்துவமனையில் சேர்த்தார்கள். அங்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். மேற்படி விபத்து குறித்து பாகலுர் காவல் நிலையத்தில் அ.சா.1.திரு.ஹரீஸ் புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிா தரப்பில் குறுக்கு விசாரணை :**

இவ்வழக்கு விபத்து சம்பவம் தொடர்பாக நான் புகார் எதுவும் காவல் நிலையத்தில் அளிக்கவில்லை என்றால் சரிதான். பாகலுர்-பேரிகை ரோட்டில் சாலையின் இடதுபுறம்தான் வழக்கு விபத்து சம்பவம் நடந்தது. 18.08.2021 ம் தேதியன்று கோவிலுக்குச் சென்றுவிட்டு திரும்பவந்த சமயத்தில்தான் வழக்கு விபத்து சம்பவம் நடந்தது. வழக்கு விபத்து சமயத்தில் திரு.அணில்குமார் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். விபந்த நடந்த தினமன்று மீண்டும் பணிக்கு திரும்பிக்கொண்டிருந்தார் என்றால் சரிதான். என்னிடம் அவருடைய நிறுவனத்திற்கு சென்று அவர்தான் திறக்கவேண்டுமேன்றும் அவரிடம்தான் சாவி உள்ளது என்றும் என்னிடம் தெரிவித்திருந்தார். திரு.அணில்குமாருக்கு பணிநேரமானது காலை 9.00 முதல் மாலை 06.00 மணிவரையாகும். விபந்து நடந்த இடத்திலிருந்து திரு.அணில்குமாரின் நிறுவனத்திற்கும் இடையே 10 கிலோமீட்டர் தொலைவிருக்கும். திரு.அணில்குமார் அவருடைய நிறுவனத்திற்கு செல்லவேண்டுமென்ற காரணத்திற்காக அவருடைய இருசக்கர வாகனத்தினை அதிவேகமாக இயக்கிவந்தார் என்றால் சரியல்ல. வழக்கு விபத்தில் எனக்கு லேசான காயம்தான் என்றால் சரியல்ல எனக்கு தையல் போடப்பட்டிருந்தது. விபத்து சம்பவத்தின் போது நானும் அணில்குமாரும் தலைக்கவசம்

அணிந்திருந்தோம். மேற்படி விவரத்தினை காவல் துறையினரின் விசாரணையின் போது தெரிவிக்கவில்லை. நாங்கள் சென்றுகொண்டிருந்த வாகனத்திற்கு முன்பு இரண்டு வாகனங்கள் சென்று கொண்டிருந்தது என்றாலும் அதனை முந்தி செல்ல முயன்றபோதுதான் விபத்து சம்பவம் நடந்தது என்றாலும் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய டிப்பர் வாகனத்தின் பதிவு எண் எனக்குத் தெரியாது. நானும் அனில்குமாரும் இரவு முழுவதும் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்றுக்கொண்டு துக்கக்களக்கத்தில் வாகனத்தை இயக்கியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. திரு.அனில்குமார் அவருடைய வாகனத்தை அஜாக்கிரதையாக இயக்கியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நானும் திரு.அனில்குமாரும் தலைக்கவசம் அணியவில்லை என்றாலும், தலைக்கவசம் அணிந்திருந்தலோ அல்லது வாகனத்தை அனில்குமார் வேகம் குறைவாக இயக்கியிருந்தாலோ வழக்கு விபத்து சம்பவம் நடந்திருக்காது என்றால் சரியல்ல. திரு.அனில்குமாரின் குடும்பத்தார் விபத்து காப்பீட்டுத் தொகை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளனரா என்று எனக்குத் தெரியாது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு**
**தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியின் முன்**
**சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு,**
**சரியென ஒப்புக்கொண்டார்.**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1**
**ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஒசூர்</u>**

**<u>(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி. சி. எண். : 149/2022**

**அ.சா. : 3**

| | | |
|---|---|---|
| பெயர் | : | முனிராஜ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | ஆஞ்சினப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 34 |

1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **நாள்: 31.01.2023**

**முதல் விசாரணை :**

நான் கர்நாடகா மாநிலம் பெங்களூர் பசவநகரில் வசித்து வருகிறேன். நான் I.T. நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோன திரு.அணில்குமார் என்னுடைய சித்தப்பா மகன் ஆவார். திரு.அணில்குமாரும் ஓட்டுநராக பணிபுரிந்துவந்தார். 18.08.2021 ஆம் தேதி திரு. அனில் குமாருக்கு சொந்தமான இரு சக்கர வாகனத்தின் அனில் குமார் வாகனத்தை ஓட்ட ஸ்ரீனிவாஸ் பின்னால் அமர்ந்து வந்துள்ளார். அவர் சொந்த ஊராக காருபெல்லாவில் நடைபெற்ற மொகரம் பண்டிகையில் கலந்த கொண்டு அடுத்த நாள் காலை ஊருக்கு திரும்பி வரும் வழியில் பேரிகை பாகலூர் ரோட்டில் குட்செட் ரோடு என்ற இடத்தை சென்றபொழுது டிப்பர் லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக 8 -8.30 மணியளவில் ஹரிஷ் எனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார். பின்பு நான் ஒசூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த அனில் குமாரை சென்று பார்த்தேன். அவருக்கு காலில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. ஸ்ரீனிவாஸிக்கு தலையில் லேசான காயம் ஏற்பட்டிருந்ததாக சொன்னார்கள். அனில் குமார் ஒசூர் அரசு

மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்பு மேல் சிசிச்சைக்காக பெங்களூர் ஈஸ்ட் பாய்ன்ட் என்ற மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனளிக்காமல் இறந்து விட்டதாக சொன்னார்கள். இது சம்மந்த போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிா தரப்பில் குறுக்கு விசாரணை :**

இவ்வழக்கு விபத்து சம்மந்தம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் நான் வழக்கு விபத்து சம்வத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரிதான். வழக்கு விபத்து சம்வம் தொடர்பாக விவரங்கள் எனக்கு கைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான். ஆகவே, யாருடைய அஜாக்கிரதையால் வழக்கு விபத்து சம்பவம் நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு**
**தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியின் முன்**
**சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு,**
**சரியென ஒப்புக்கொண்டார்.**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1**
**ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஒசூர்**
**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி. சி. எண். : 149/2022**
**அ.சா. : 4**

| | | |
|---|---|---|
| பெயர் | : | மஞ்சுநா |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | முனியப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 36 |

1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **நாள்: 31.01.2023**

**முதல் விசாரணை :**

நான் கர்நாடகா மாநிலம் பெங்களுர் டிஒசஹள்ளியில் குடியிருந்து வருகிறேன். நான் I.T. நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோன திரு.அணில்குமார் என்னுடைய சித்தப்பா மகன் ஆவார். திரு.அணில்குமாரும் ஓட்டுநராக பணிபுரிந்துவந்தார். 18.08.2021 ஆம் தேதி திரு. அனில் குமாருக்கு சொந்தமான இரு சக்கர வாகனத்தின் அனில் குமார் வாகனத்தை ஓட்ட ஸ்ரீனிவாஸ் பின்னால் அமர்ந்து வந்துள்ளார். அவர் சொந்த ஊராக காருபெல்லாவில் நடைபெற்ற மொகரம் பண்டிகையில் கலந்த கொண்டு அடுத்த நாள் காலை ஊருக்கு திரும்பி வரும் வழியில் பேரிகை பாகலூர் ரோட்டில் குட்செட் ரோடு என்ற இடத்தை சென்றபொழுது டிப்பர் லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக 8 -8.30 மணியளவில் ஹரிஷ் எனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார். பின்பு நான் ஒசூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த அனில் குமாரை சென்று பார்த்தேன். அவருக்கு காலில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. ஸ்ரீனிவாஸிக்கு தலையில் லேசான காயம் ஏற்பட்டிருந்ததாக சொன்னார்கள். அனில் குமார் ஒசூர் அரசு

மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்பு மேல் சிசிச்சைக்காக பெங்களூர் ஈஸ்ட் பாய்ன்ட் என்ற மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனளிக்காமல் இறந்து விட்டதாக சொன்னார்கள். இது சம்மந்த போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிா தரப்பில் குறுக்கு விசாரணை :**

இவ்வழக்கு விபத்து சம்மந்தம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் நான் வழக்கு விபத்து சம்வத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரிதான். வழக்கு விபத்து சம்வம் தொடர்பாக விவரங்கள் எனக்கு கைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான். ஆகவே, யாருடைய அஜாக்கிரதையால் வழக்கு விபத்து சம்பவம் நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு**
**தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியின் முன்**
**சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு,**
**சரியென ஒப்புக்கொண்டார்.**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1**
**ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஒசூர்**
**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி. சி. எண். :** 149/2022
**அ.சா. :** 5

| | | |
|---|---|---|
| பெயர் | : | கோபி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | அனுமந்தப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 42 |

1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **நாள்: 31.01.2023**

**முதல் விசாரணை :**

நான் கர்நாடகா மாநிலம் பெங்களூர் பசவநகரில் குடியிருந்து வருகிறேன். நான் காரை வேலை செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோன திரு.அணில்குமார் என்னுடைய அண்ணன் மகன் ஆவார். திரு.அணில்குமாரும் ஓட்டுநராக பணிபுரிந்துவந்தார். 18.08.2021 ஆம் தேதி திரு. அனில் குமாருக்கு சொந்தமான இரு சக்கர வாகனத்தின் அனில் குமார் வாகனத்தை ஓட்ட ஸ்ரீனிவாஸ் பின்னால் அமர்ந்து வந்துள்ளார். அவர் சொந்த ஊராக காருபெல்லாவில் நடைபெற்ற மொகரம் பண்டிகையில் கலந்த கொண்டு அடுத்த நாள் காலை ஊருக்கு திரும்பி வரும் வழியில் பேரிகை பாகலூர் ரோட்டில் குட்செட் ரோடு என்ற இடத்தை சென்றபொழுது டிப்பர் லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக 8 -8.30 மணியளவில் ஹரிஷ் எனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார். பின்பு நான் ஒசூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த அனில் குமாரை சென்று பார்த்தேன். அவருக்கு காலில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. ஸ்ரீனிவாஸிக்கு தலையில் லேசான காயம் ஏற்பட்டிருந்ததாக சொன்னார்கள். அனில் குமார் ஒசூர் அரசு

மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்பு மேல் சிசிச்சைக்காக பெங்களூர் ஈஸ்ட் பாய்ன்ட் என்ற மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனளிக்காமல் இறந்து விட்டதாக சொன்னார்கள். இது சம்மந்த போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிா தரப்பில் குறுக்கு விசாரணை :**

இவ்வழக்கு விபத்து சம்மந்தம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் நான் வழக்கு விபத்து சம்வத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரிதான். வழக்கு விபத்து சம்வம் தொடர்பாக விவரங்கள் எனக்கு கைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான். ஆகவே, யாருடைய அஜாக்கிரதையால் வழக்கு விபத்து சம்பவம் நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு**
**தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியின் முன்**
**சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு,**
**சரியென ஒப்புக்கொண்டார்.**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1**
**ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஒசூர்</u>**

**<u>(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி. சி. எண். : 149/2022**

**அ.சா. : 6**

| | | |
|---|---|---|
| பெயர் | : | மஞ்சுநாத் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | ஆஞ்சனப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 26 |

1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **நாள்: 31.01.2023**

**முதல் விசாரணை :**

நான் கர்நாடகா மாநிலம் பெங்களூர் பசவநகரில் குடியிருந்து வருகிறேன். நான் சுயதொழில் செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோன திரு.அணில்குமார் என்னுடைய சித்தப்பா மகன் ஆவார். திரு.அணில்குமாரும் ஓட்டுநராக பணிபுரிந்துவந்தார். 18.08.2021 ஆம் தேதி திரு. அனில் குமாருக்கு சொந்தமான இரு சக்கர வாகனத்தின் அனில் குமார் வாகனத்தை ஓட்ட ஸ்ரீனிவாஸ் பின்னால் அமர்ந்து வந்துள்ளார். அவர் சொந்த ஊராக காருபெல்லாவில் நடைபெற்ற மொகரம் பண்டிகையில் கலந்த கொண்டு அடுத்த நாள் காலை ஊருக்கு திரும்பி வரும் வழியில் பேரிகை பாகலூர் ரோட்டில் குட்செட் ரோடு என்ற இடத்தை சென்றபொழுது டிப்பர் லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக 8 -8.30 மணியளவில் ஹரிஷ் எனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார். பின்பு நான் ஒசூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த அனில் குமாரை சென்று பார்த்தேன். அவருக்கு காலில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. ஸ்ரீனிவாஸிக்கு தலையில் லேசான காயம் ஏற்பட்டிருந்ததாக சொன்னார்கள். அனில் குமார் ஒசூர் அரசு

மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்பு மேல் சிசிச்சைக்காக பெங்களூர் ஈஸ்ட் பாய்ன்ட் என்ற மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனளிக்காமல் இறந்து விட்டதாக சொன்னார்கள். இது சம்மந்த போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிா தரப்பில் குறுக்கு விசாரணை :**

இவ்வழக்கு விபத்து சம்மந்தம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் நான் வழக்கு விபத்து சம்வத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரிதான். வழக்கு விபத்து சம்வம் தொடர்பாக விவரங்கள் எனக்கு கைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான். ஆகவே, யாருடைய அஜாக்கிரதையால் வழக்கு விபத்து சம்பவம் நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல.

**எதிரீ தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு,
சரியென ஒப்புக்கொண்டார்.**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1
ஒசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஒசூர்**
**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி. சி. எண். : 149/2022**
**அ.சா. : 7**

| | | |
|---|---|---|
| பெயர் | : | சதீஷ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | எல்லப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 31 |

1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **நாள்: 31.01.2023**

**முதல் விசாரணை :**

நான் தற்பொழுது பாகலுரில் குடியிருந்து வருகிறேன். நான் பஞ்சாயத்து வார்டு மெம்பராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு இவ்வழக்கு விபத்து சம்பவத்தில் இறந்துபோன திரு.அணில்குமாடரை எனக்கு தெரியாது. 19.08.2021 அன்று மதியம் 2.00 மணியளவில் குட்செட்லு என்ற இடத்தில் நடந்த விபத்து சம்மந்தமான வழக்கில் பாகலுர் காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தனர். அந்த பார்வை மகசரில் நானும் முருகேசன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும பார்வை மகசரிலுள்ள 1-வது உள்ள கையெழுத்து என்னுடையது. **(மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** இது சம்மந்த போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிா தரப்பில் குறுக்கு விசாரணை :**

காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்கதான் அ.சா.ஆ. 2 பார்வை மகசரில் கையொப்பமிட்டேன் என்றால் சரியல்ல, சம்பவ இடத்தில் நான் இருந்த காரணத்தினால் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். அ.சா.ஆ. 2 பார்வை மகசரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு முழுமையாக தெரியாது அதனால் காவல் துறையினர் ஒரு சில விவரங்கள் தெரிவித்தனர். இவ்வழக்கு விபத்து சம்பவம் தொடர்பாக காவல் துறையினர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு**
**தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியின் முன்**
**சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு,**
**சரியென ஒப்புக்கொண்டார்.**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1**
**ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஒசூர்**
**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி. சி. எண். :** 149/2022
**அ.சா. :** 8

| | | |
|---|---|---|
| பெயர் | : | முருகேஸ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | கிருஷ்ணப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | | 41 |

1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **நாள்: 31.01.2023**

**முதல் விசாரணை :**

நான் தற்பொழுது பாகலுரில் குடியிருந்து வருகிறேன். நான் மரவேலை செய்து வருகிறேன். எனக்கு இவ்வழக்கு விபத்து சம்பவத்தில் இறந்துபோன திரு.அணில்குமாடரை எனக்கு தெரியாது. 19.08.2021 அன்று மதியம் 2.00 மணியளவில் குட்செட்லு என்ற இடத்தில் நடந்த விபத்து சம்மந்தமான வழக்கில் பாகலுர் காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தனர். அந்த பார்வை மகசரில் நானும் சதிஷ் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும பார்வை மகசரிலுள்ள 2-வது உள்ள கையெழுத்து என்னுடையது. இது சம்மந்த போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிா தரப்பில் குறுக்கு விசாரணை :**

காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்கதான் அ.சா.ஆ. 2 பார்வை மகசரில்

கையொப்பமிட்டேன் என்றால் சரிதான். அ.சா.ஆ. 2 பார்வை மகசரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு முழுமையாக தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கு விபத்து சம்பவம் தொடர்பாக காவல் துறையினர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு**
**தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியின் முன்**
**சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு,**
**சரியென ஒப்புக்கொண்டார்.**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1**
**ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்.**